முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***
***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**
**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**
**பாகம்: 586**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

07.05.2021, வெள்ளிக்கிழமை

1. பார்காக்க வந்த மாதவசியே
பரமானந்த சதா சிவ சற்குருவே
சீர்திருத்தம் செய்து இந்த கலியுகத்தை
சித்திமிக்க ஞான யுகமாக மாற்ற வந்த அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
வரங்கள் பெற்று என்பால் அரங்கன் நீ
வையகத்தை காக்க என் சக்தியாக வந்து பிறந்திருக்க
3. இருக்கவே உந்தன் அவதாரத்தின் நோக்கமாக
இந்த உலகம் ஞான யுகமாக மாற்றம் பெறும்
சிந்தைபட உன் தொண்டர்களை கொண்டே
சீர்திருத்தத்தை சுப்ரமணியர் யானும் நடத்தி காப்பேன்
4. காப்பாக உன்பால் தீட்சை பெற்ற மக்கள் மூலம்
கலியுகத்தை மாற்றம் செய்து அருள்புரிவேன்
அருள்பெறவே உந்தன் பிரணவக்குடில் நோக்கி அகிலத்தார் ஒன்றிணைந்து வருகவருக
அருளோடு பொருள்வளம் கூடி வரும் மக்களுக்கு அழியாமை என்கின்ற சக்தி கிட்டி உயர்வு கூடும்
5. கூடாத மாச்சர்யங்கள் ஒழியும்
கிருமி வகையான அழிவுகளும் அகன்றோடி
ஈடேரும் இந்த கலியுகம் பாதுகாப்பு மிக்க
இணையில்லாத ஞான யுகமாக
6. ஆகவே அரங்கன் வழிவழி உலகோர்
அணுகி சரணடைந்து வருதல் காண
வகைபட சடுதி மாற்றம் கண்டு மண்ணுலகம்
அரங்கன் உன்னருளால் பேர் அற்புதம் காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம். – ஆறுமுக அரங்கமகா தேசிகர்.